மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்வியியல் கல்லூரி வளாகத்தில தனியாக ஒரு பகுதியை ஒதுக்கிடு செய்ய கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும். ரூ. 1½ லட்சம் மதிப்பில் அந்தப் பள்ளியினுடைய ஆய்வு கூடக் கட்டிடம் கட்டுவதற்கும், ஆய்வுக் கூடத் தளவாடங்களுக்கும் 1986—87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. மேற்கண்ட வசதிகளை செய்து தர அரசு தக்க நடவடிக்கையை ஆய்ந்து எடுக்கும்.

(ஏ) அய்யம்பேட்டையில் துணை மின்நிலையம் அமைக்கும் பணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு எஸ். இராசாராமன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் சார்பில் அந்தப் பொருள்குறித்து டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், அய்யம்பேட்டை பேரூராட்சியில் ஒரு துணை மின்நிலையம் அமைக்க அரசு அனுமதி வழங்கி சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் கட்டுமானப் பணிகள் துவங்கப்படாமல் இருப்பது குறித்தும் அதனால் சுற்றுப்புற கிராமங்களுக்கு விவசாயம் மற்றும் பல பணிகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் பொதுமக்கள் மிகவும் அவதிப் படுவது குறித்தும்" உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

அய்யம்பேட்டை 66/11 கே.வி. துணைமின் நிலையத்திற்கான 4 கி.மி. 66 கே.வி. மின் கம்பித் தொடர் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. துணை மின் நிலைய கட்டுமானப்

1987 ஏப்ரல் 28] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

பணிகள் நடைபெற்று வருகின்றன. 6 மாத காலத்திற்குள் பணியினை முடித்து துணை நிலையத்தினை இயக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அய்யம்பேட்டை துணை மின் நிலையம் அமைக்கப்படாததால் சுற்றுப்புற கிராமங்களில் விவசாயம் மற்றும் இதர பணிகளுக்காக மின்சார இணைப்புகள் வழங்க முடியாத நிலை இல்லை. மேற்கண்ட பணிகளுக்கு மின் இணைப்புகள் மற்ற இடங்களில் வழங்குவது போல் வழங்கப்படுகின்றன.

(ஐ) வட ஆற்காடு மாவட்டம் தெக்குப்பட்டியிலுள்ள சந்தன மரப் பொருட்கள் தொழிற்சாலை பராமரிப்புப் பணிகள்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு மாவட்டம், தெக்குப்பட்டில் அமைந்துள்ள சந்தன எண்ணெய் தொழிற்சாலை 31—1—1987 முதல் மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின்கீழ் இயங்கி வரும் வடாற்காடு மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்தில் உள்ள சந்தன மரப்பொருட்கள் தொழிற்சாலை 31—3—1987 முதல் மூடப்படவில்லை. ஆனால், இத்தொழிற்சாலையில் வருடாந்திர பராமரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2. 1—12—1984 முதல் இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட சந்தன எண்ணெயின் அளவு 9 டன்களாகும். அதில் 31—3—1987 அன்று கையிருப்பில் உள்ள சந்தன எண்ணெய் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள 5 டன்களாகும். சந்தன மரத்தின் மார்க்கெட் விலை உயர்ந்துவிட்டது. ஆனால், அதற்கேற்ப சந்தையில் சந்தன எண்ணெயின் விற்பனை விலைக்கு உயரவில்லை. எனவே, அப்போதிருந்த மார்க்கெட் விலைக்கு சந்தன